**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 131 /2023**

**Deposition of P.W.**1

Name : திருமதி. ஜிஜிலெட் செலினா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:18.06.2025

**Accused Present.**

முதல் விசாரணை—

நான் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் தற்போது பள்ளியாடியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றிய போது ஏற்றக்கோடு ஊராட்சியில்அரசு திட்டப்படி 2015—2016ம் ஆண்டு 14து நிதிகுழு மானியத்தில் செயல்படுத்தப்பட்ட பியூலா என்பவரது வீடு முதல் தங்கபாய் வீடு வரை ரூ.50,000/— மதிப்பீட்டில் வழிப்பாதையில் பக்கசுவர் மற்றும் இன்டர்லாக் அமைக்கப்பட்டது. தங்கபாய் என்பவர் வீட்டு முன்பு இருந்த இன்டர்லாக் கற்களை கழற்றி எடுத்து சென்றதாக தங்கபாய் க/பெ. தோமாஸ் கொடுத்த புகாரின் பேரில் நான் 22.10.2019ம் தேதி இடம் சென்று ஆய்வு செய்து இன்டர்லாக் கற்கள் கழற்றி எடுக்கப்பட்டது தெரிய வந்தது. எனவே திருவட்டார் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1.

.2.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நாங்கள் இன்டர்லாக் கற்கள் பதித்த சொத்து ரீசர்வே 408/10ல் உள்ள 4 செண்ட் சொத்து என்றால் சரியல்ல, அது வழிப்பாதை ஆகும். இன்டர்லாக் கற்கள் பதித்த சொத்தை 2வது எதிரி 05.11.1996ல் ஆவண எண்.1772/96ன் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இன்டர்லாக் கற்கள் அமைத்த சொத்து 2வது எதிரி பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ரீசர்வே பிளான் பற்றி எனக்குத் தெரியாது. அரசு திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்றால் சொத்தானது அரசுக்கு சொந்தமானதாக இருக்க வேண்டுமென்றால் சரிதான். திட்டத்தை நிறைவேற்ற வருவாய்துறையில் தடையில்லா சான்று பெறவேண்டுமென்றால் சரிதான். வருவாய்துறையில் தடையில்லா சான்று வாங்கி இருக்கலாம். ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஊராட்சி தீர்மானத்தை நான் தாக்கல் செய்யவில்லை. அரசுக்கு சொந்தமான சொத்து என்று காட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை. தங்கபாய் கொடுத்த புகாரை காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை. 19.10.2019ல் சம்பவம் நடந்ததாக தங்கபாய் புகார் கொடுத்தார். நான் கொடுத்த புகாரில் எதிரிகள் எப்போது எத்தனை மணிக்கு இன்டர்லாக் கற்களை அகற்றினார்கள் என்று கூறவில்லை. காவல்நிலையத்தில் 31.10.2019ம் தேதி புகார் கொடுத்தேன். புகாருடன் 14வது நிதிகுழு 2015- 2016 மானிய கோரிக்கை நகலை கொடுக்கவில்லை. அடிக்கடி எதிரிகள் மீது புகார் வரவில்லை. என்னுடன் பஞ்சாயத்து செயலர் திரு. ஜஸ்டின் செல்வகுமார் வந்தார். தங்கபாயை நான் விசாரித்தேன். 21.10.2019ம் தேதி முதல் 31.10.2019 வரை நான்

தட்டச்சு செய்து கடிதம் தயார் செய்து அறிக்கை பெற்றதால் காலதாமதம் ஏற்பட்டது. சம்பவ இடத்தில் 2 வீடுகள் தான் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் யார், யார் வீடுகள் உள்ளது என்று எனக்குத் தெரியாது. பொய்யாக கூறுவதால் தான் யார், யார் வீடுகள் உள்ளது என்று கூறவில்லை என்றால் சரியல்ல. தங்கபாய் வீட்டிற்கு செல்ல தாவா பாதை வழியாக தான் செல்ல வேண்டும். தங்கபாய் வீட்டிற்கு செல்ல தனியாக பாதை உள்ளது என்றும் அதனை பார்க்காததால் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தங்கபாய் கொடுத்த மனு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பவில்லை. அரசுக்கு சொந்தமான சொத்தை எதிரிகள் சேதப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. 2015 – 2016ல் 2வது எதிரி சென்னையில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 2வது எதிரியின் சொத்தில் சுந்தர்சிங், தாமஸ், தங்கபாய் ஆகியவர்கள் சேர்ந்து அத்துமீறி கற்களை பதித்தோம் என்றால் சரியல்ல. 2வது எதிரி கற்களை அகற்ற கோரி எங்களிடமும், முதல்வரின் தனி பிரிவிற்கும் மனு கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இன்டர்லாக் கற்களை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி எனக்குத் தெரியாது. கற்களை அகற்றாமல் சொத்தின் உரிமையாளர் மீது பொய் வழக்கு போட்டோம் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண். 29/2020 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றல் அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், தற்போது கேள்விபட்டேன். எதிரிகளுக்கும், வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

## Deposition of P.W.2

Name : சுந்தர் சிங்

S/o, D/o, W/o :அருள் சண்முகம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**18.06.2025**

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் மார்த்தாரில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். இன்டர்லாக் கற்கள் எடுத்ததை நான் பார்த்தேன். 29.10.2019ம் தேதி இரவு 11.00 மணியளவில் எதிரிகள் சிம்லாள், சசிகலா, அஜின் ஆகிய மூவரும் இன்டர்லாக் கற்களை எடுத்தார்கள். அதை நான் பார்த்தேன். வட்டார வளர்ச்சி அலுவலர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் இன்டர்லாக் கற்களை எடுத்தது குறித்து நான் புகார் கொடுக்கவில்லை. பஞ்சாயத்து பொருளை எடுத்ததால் பஞ்சாயத்து தலைவரிடம் சொன்னேன். எனது வீடு சிமிலாள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ளது. ஒரே பாதை வழியாக தான் இருவரும் மின்சாரம்



எடுத்துள்ளோம். நான் சொல்லும் வழிப்பாதையில் மின்கம்பங்கள் இல்லை. குடிநீர் இணைப்பு கொடுக்கப்படவில்லை. சிமிலாள் சொத்தில் அத்துமீறி

நுழைந்து நானும், தங்கபாய், தாமஸ் ஆகியவர்கள் பஞ்சாயத்து உதவியுடன் இன்டர்லாக் கற்களை பதித்து விட்டோம் என்றால் சரியல்ல. எதிரிகளின் சொத்தில் பாதையை உருவாக்க நாங்கள் முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல. எங்கள் மீது நடவடிக்கை வந்து விடும் என பயந்து எதிரிகள் மீது பொய் வழக்கு கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிகள் எவ்வித தவறும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 131/2023**

**Deposition of P.W.**3

Name : சுரேஷ்குமார்

S/o, D/o, W/o : வறுவேல்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**18.06.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் மாத்தாரில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டி வருகிறேன். சம்பவம் பற்றி எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரிகள் அரசுக்கு சொந்தமான வழிப்பாதையில் அமைக்கப்பட்ட இண்டர்லாக் கற்களை சட்டவிரோதமாக அகற்றியது குறித்து போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.